இதைப்பற்றி இதுநாள்வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே அதன்மேல் நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுபற்றிய பதில் அரசுத் தரப்பிலிருந்து வரவில்லை.

திரு. சி. ஆறுமுகம்: என்ன காரணம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் பேச அனுமதித் திருக்கிறேனே அதையே நீங்கள் பாராட்ட வேண்டும்.

திரு. சி. ஆறுமுகம்: பேசுவதற்குத்தானே நாங்கள் வந்திருக் கிருேம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்கார்ந்துகொண்டே பேசுகின்ற பழக்கத்தை விடுங்கள். தாங்கள் எந்தவிதமான கவனஈர்ப்போ அல்லது ஒத்திவைப்புத் தீர்மானமோ இதைப் பற்றிக் கொடுக்கவில்லை, தாங்கள் பேசாமல் இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(ஈ) திருவிடைமருதூர், பந்தி கிராமம், அரிசன குடியிருப்புக்குத் தீவைத்தது குறித்து.

திரு. செ. இராமலிங்கம்: தலைவர் அவர்களே. நான் விதி 42-ன் கீழ் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் கோட்டம், திருவிடைமருதூர் தொகுதியைச் சேர்ந்த பந்தி கிராமத்தில் 29—3—1978 அன்று அரிசன மக்கள் குடியிருப்புகளுக்கு தீவைத்தும், அரிசனரல்லாதார் அருவர் கொலை செய்யப்பட்டும், இதுவரை தக்க நடவடிக்கை எடுக்காமலும் பொதுமக்களுக்குத் தக்க பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளாததாலும் ஏற்பட் டுள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்க வேண்டுமென்று ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதைப்பற்றி பதிலே வரவில்லை.

மேலும், 78 ஆசிரியர்கள்பற்றியும் சஸ்பெண்ட் செய்யப் பட்டதுபற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருந்தது. அதைப்பற்றியும் இன்னும் தகவல் வரவில்லை. அதற்கும் பதில் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பந்த நல்லூரில் 3 பேர்கள் இறந்து போனுர்கள். அதைப்பற்றியும் நான் நோட்டீஸ் கொடுத்திருந்தேன். இந்த மூன்று காரியங்களுக்கும் எந்தவிதமான பதிலும் வரவில்லை. முக்கியமான விஷயங்கள் என்று கருதி நாங்கள் கொடுக்கிருேம் ஆனுல், மேலவையிலே இதைப்பற்றி.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதையெல்லாம் சொல்ல வேண்டாம் இங்கே. உங்களுக்குக் கொடுத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு சொல்லுங்கள். அரசுத் தரப்பிலிருந்து பதில் வந்தால் வரலாம்.